செ.வெ.எண் : 32/ ஜூலை நாள் : 30.07.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பாக நடைபெற்ற விழாவில் 702 பயனாளிகளுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

## மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள் வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (30.07.2021) நடைபெற்ற விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்கள், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பாக 333 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகளுக்கும், பல்வேறு அரசு நலத்திட்டங்களின் கீழ் 369 பயனாளிகளுக்கும் என மொத்தம் 702 பயனாளிகளுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் (இராமநாதபுரம்) திரு.காதர்பாட்சா முத்துராமலிங்கம் அவர்கள், (பரமக்குடி) திரு.செ.முருகேசன் அவர்கள், கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.உ.திசைவீரன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் இன்றைய தினம் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பாக 50,000 அமைப்பு சாரா தொழிலாளர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணிகளை துவக்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு அமைப்பு சாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம், தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் உள்ளிட்ட 18 விதமான நலவாரியங்களை செயல்படுத்தி வருகின்றது. இதில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் 53 வகையான கட்டுமானத் தொழில்கள் மற்றும் தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் மூலம் 60 வகையான அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உடலுழைப்பு தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1999-ஆம் அன்று தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் உருவாக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 2006 முதல் 2011 வரை 15 தனி நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. மேலும், அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பதிவு மற்றும் புதுப்பித்தலின் போது வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 01.09.2006 அன்று முதல் முழுமையாக ரத்து செய்யப்பட்டது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் வழியில் மாண்புமிகு தளபதியார் அவர்களின் தலைமையிலான அரசு அமைப்பு சாரா தொழிலாளர்களின் நலஜன உறுதி செய்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்பட்டு வருகிறது என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் அறிவித்த பெண்களுக்கு இலவச பயண திட்டம் மகளிர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம், நகரப் பேருந்துகளின் பயணிப்பவர்களில் 60 சதவிதம் பெண்கள் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஏழை எளிய நடுத்தர மக்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகத்திற்கு ரூ.1358 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. அதில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் உத்தரவின் பேரில் இரசின் மூலம் போக்குவரத்துத் துறைக்கு தற்சமயம் ரூ.1,200 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போக்குவரத்துத் துறை, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இடைத்தரகர்களை இல்லாமல், பணிகளில் முற்றிலும் வெளிப்படைத் தன்மை உறுதி செய்யப்படும். இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் குதிரைமொழி, நரிப்பையூர் குடிநீர் திட்டப்பணிகள் செயல்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வைகை அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரை இராமநாதபுரம் பெரிய கண்மாய், சக்கரக்கோட்டை கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளில் சேமித்து உரிய முறையில் பயன்படுத்துவதற்கும், நிலத்த நீர் மட்டத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.மு.காமாட்சி கனேசன், இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சேக் மன்சூர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.இரா.பழனிகுமார், தொழிலாளர் நல ஆய்வாளர் திருமதி.மலர்விழி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் திரு.வேலுச்சாமி, உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**